# கிழக்கு மாகாண சபையின் அபிவிருத்தி அரங்கம்

## *அம்பாறை மாவட்ட கூட்டறிக்கை*

இடம் : TFC மண்டபம், அக்கரைப்பற்று

திகதி : 29.07.2013

வருகை தந்தோர் : பின்னிணைக்கப்பட்டுள்ளது

### 1. வரவேற்புரையும் அறிமுகமும்

மாகாண அபிவிருத்தி அரங்கத்தின் அம்பாறை மாவட்ட கூட்டத்திற்கு வருகை தந்திருந்த கௌரவ முதலமைச்சர், அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், மாகாண செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளை வரவேற்ற பிரதம செயலாளர் மாகாண அபிவிருத்தி அரங்கத்தின் அம்பாறை மாவட்ட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணங்களையும் அதன் நோக்கங்களையும் எடுத்துக் கூறினார்.

இத்தகைய மாவட்ட மட்ட கூட்டங்களின் மூலம் அபிவிருத்தி திட்டமிடல் நடைமுறையில் கௌரவ முதலமைச்சர், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், சமூக பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் பங்கு கொள்வதினால் இவர்களிடையே ஒரு சிநேக பூர்வமான உறவு மலர்வதுடன் மக்களுக்கு பயன் தரும் சிறந்த பெறுபேறுகளைக் கொண்ட திட்டங்களை அமுலாக்கவும் அவற்றினை ஆக்கபூர்வமான முறையில் கண்காணித்து மீளாய்வு செய்யவும் மதிப்பீடுகளை செய்யவும் அமுலாக்கல் பிரச்சினைகளை விவாதித்து தீர்வு காணவும் முடியும் என்றும் குறிப்பிட்டார்.

### 2. கௌரவ முதலமைச்சரின் சிறப்புரை

மாவட்டங்கள் தோறும் மக்கள் பிரதிநிதிகளை கலந்து பேசி மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு இத்தகைய மாகாண அபிவிருத்தி அரங்க மாவட்டக் கூட்டம் உதவும் என்று கௌரவ முதலமைச்சர் தனது சிறப்புரையில் குறிப்பிட்டார். ஜூன் மாதம் இத்தகைய கூட்டம் திருகோணமலையில் நடாத்தப்பட்டது என்றும் நாளை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிட்டார். இந்த வகையில் எமது மாகாணத்திலுள்ள மூவின மக்களுக்கும் எம்மாலான சேவைகளை செய்ய காத்திருக்கிறோம் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்த அவர், 2013ம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தின் முக்கிய துறைகளில் முதலீடு செய்வதற்காக ஏறத்தாழ 7000 மில்லியன் ரூபா கிடைக்கவிருப்பதாகவும் அதில் ஏறத்தாழ 2726 மில்லியன் ரூபா அம்பாறை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். இதில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, JICA போன்ற நிதி நிறுவனங்களின் உதவியுடன் அமுலாக்கப்படும் திட்டங்களும் அடங்குகின்றன என்று தெரிவித்தார்.

மிகவும் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் கடமை புரிந்து கொண்டு இருக்கும் மாகாண அரச அதிகாரிகளின் கடமையுணர்வை பாராட்டிய கௌரவ முதலமைச்சர், அனைவரினதும் ஒன்றிணைந்த செயற்பாடுகளின் மூலம் சிறப்பான செயலாற்றுகையை வெளிப்படுத்தி அமுலாக்கப்படும் திட்டங்களின் பெறுபேறுகளை மக்களுக்கு கிடைக்கச் செய்வதனை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இவ்வகையில் செயல்படும் போது மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு எமது மாகாணமும் ஏனைய மாகாணங்களை விட முன்னணியில் திகழும் என்றும் குறிப்பிட்டார்.

### 3. கிழக்கு மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம்

கௌரவ முதலமைச்சரின் சிறப்புரையைத் தொடர்ந்து கிழக்கு மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் தொடர்பான குறுகிய விளக்கப்பட உரை ஒன்றினை திட்டமிடல் பிரதிப் பிரதம செயலாளர் நிகழ்த்தினார்.

தேசிய அபிவிருத்தி கொள்கையுடன் இணைந்த வகையில் கிழக்கு மாகாணத்தின் பிரத்தியேக தேவைகளையும் கருத்தில் கொண்டு மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் தயாரிக்கப்படுவதாக தெரிவித்த அவர் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வருடாந்த அமுலாக்கல் திட்டங்கள் யாவும் ஏற்கனவே சீரானமுறையில் தயாரிக்கப்பட்ட கிழக்கு மாகாண நிறுவன பெறுபேற்று உருவகமைப்பினை (Agency Results Framework) அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படுவதாகவும் அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகள் இயலுமானவரையில் மாவட்டங்களுக்கிடையில் உரிய அளவில் பங்கீடு செய்யப்படுவதுடன் மாவட்டங்களினுள்ளே இனரீதியிலான பகிர்வுகளும் பேணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

## 4. அபிவிருத்தி துறைகள் ரீதியான கலந்துரையாடல்

துறைசார் கலந்துரையாடல்களிற்காக அபிவிருத்தி துறைகள் மாகாண அமைச்சுகள் வாரியாக ஒழுங்குபடுத்தப்பட்டு ஒவ்வொரு தலைப்பிலான கலந்துரையாடலின் ஆரம்பத்திலும் குறிப்பிட்ட மாகாண அமைச்சு செயலாளர்கள் பிரதான அபிவிருத்திக் கூறுகள், நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்கால அபிவிருத்தி விடயங்கள், முதலீடுகளின் சாராம்சம் தொடர்பாக விளக்கப்படவுரைகளை மேற்கொண்டு கலந்துரையாடலுக்கு வசதியளித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அபிவிருத்தித் தலைப்புகளிலான கலந்துரையாடல்களின் போது அரங்கில் பங்குபற்றியவர்களினால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

- தேசத்திற்கு மகுடம் விசேட திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை மற்றும் புனரமைப்பு வேலைத்திட்டங்களில் கல்முனை மாநகர சபை உரிய அளவில் உள்வாங்கப்பட்டிராமை தொடர்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே பொத்துவில் தொடக்கம் கல்முனை வரையிலான கரையோரப் பகுதிகளிற்கான அபிவிருத்தி வேலைகள் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டது. இந்த விசேட திட்டமானது முழுவதுமாக மாகாண சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவன்றி தேசத்திற்கு மகுடம் செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட திட்டங்களை மாகாண சபையின் கீழ் வரும் தொடர்புடைய மாகாண நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தியிருந்தன எனவும் விளக்கமளிக்கப்பட்டது.

- JICA நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய திட்டத்திற்கு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்ட நடைமுறை பற்றி நீண்ட கலந்துரையாடல் இடம் பெற்றதுடன் சில அதிருப்திகளும் தெரிவிக்கப்பட்டன. ஆரம்பத்தில் அதிக எண்ணிக்கையான கிராமங்கள் பரிசீலனைக்காக அடையாளங்காணப்பட்டதாகவும் பின்னர் திட்டத்திலிருந்து கிடைக்கவிருக்கும் நிதியின் அளவு மற்றும் அடிப்படைத் தெரிவு, பிரமாணமான வறுமைச்சுட்டெண் என்பவற்றின் பின்னணியில் அம்பாறை மாவட்டத்தில் 05 கிராம கொத்தணிகள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் உரிய உத்தியோத்தர்களினால் விளக்கமளிக்கப்பட்டது.

- திருக்கோவில் பகுதியில் இன்னமும் 4 கிராமங்களில் மக்கள் முழுமையாக குடியேற்றப்படாமல் இருக்கின்றனர் என்றும் அங்கு கல்வி, சுகாதார, வீதி தேவைகள் நிறைய உள்ளன என்றும் இவ்வாறான அடிப்படை வசதிகளையேனும் ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என கோரப்பட்டதுடன் இவற்றினூடாகவே இனங்களிடையே ஒற்றுமையை வளர்க்க முடியும் எனவும் கருத்து முன்வைக்கப்பட்டது. இதற்கு முன்னைய கூட்டங்களிலும் புனர்வாழ்விற்கு மிகக் குறைந்தளவு நிதி ஒதுக்கப்படுவதுபற்றி குறிப்பிடப்பட்ட போது, இது பற்றி மத்திய அரசுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தும் சாதகமான முன்னேற்றம் எதுவுமில்லை என்று பிரஸ்தாபிக்கப்பட்டது.

- ஆசிரியர்களைப் பகிர்ந்தளிப்பதில் குறைபாடுகள் காணப்படுவதாகவும் பல இடங்களில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன என்றும் தெரிவித்து பல பாடசாலைக் கட்டடங்கள் இன்னமும் முடிவுறாமல் இருப்பதனையும் சுட்டிக் காட்டினர். முடிவுறாமல் இருக்கும் பாடசாலைக் கட்டடங்கள் 1000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்திலும், இசுறு பாடசாலைகள் திட்டத்திலும் உள்வாங்கப்பட்டு வேலைகள் பூர்த்தியாக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பதிலளித்தார்.

- JICA நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் கொன்கிறீட் வீதிகள் மிகவும் தரம் குறைவானதாக உள்ளதாகவும் விரைவில் உடைந்து விடுகின்றன என்றும் தரமற்ற சீமெந்தின் பாவனை காரணமாகவே புழுதி அதிகமாக வெளிவந்து சுகாதார சீர்கேட்டிற்கும் காரணமாகிறது என்றும் கவலை தெரிவிக்கப்பட்டது. வீதிகள் அமைக்கப்பட்ட பின்னர், இவ்வீதிகளின் தரம் பரிசீலிக்கப்பட்டு குறைபாடுகள் காணப்பட்டாலும் அவற்றிற்கான கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்படுகின்ற நிலையும் சுட்டிக்காட்டப்பட்டதுடன் இச்செயற்பாடுகளில் ஊழல் இடம்பெறுவதாகவும் முறையிடப்பட்டது. பிரதேச மட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளையும் திட்ட அலுவலக பிரதிநிதிகளையும் இணைத்து இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒரு கூட்டம் நடாத்துமாறு கோரப்பட்டது.

- பிரதேச சபைகளுக்குரிய தார் வீதிகளைப் பராமரிப்பதற்கு ஒரு விசேட செயற்திட்டம் அவசியமானது என்றும் இவ்வாறான திட்டம் இல்லாவிடில் அவ்வீதிகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் மேன்மேலும் அதிகரிக்கும் என்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

- நாவிதன்வெளி பிரதேசத்தின் நீர் விநியோகப் பிரச்சினைகள் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்ட போது JICA நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய திட்டத்தில் நாவிதன்வெளி நீர் விநியோக திட்டமும் சேர்க்கப்பட்டுள்ளதாக கௌரவ அமைச்சர் பதிலளித்தார்.

- விவசாயத்தினை நம்பி வாழும் அக்கரைப்பற்று விவசாயிகள் ஏறத்தாழ 500 ஏக்கர் விளைநிலத்தினை இழக்கும் அபாயம் உள்ளதால், சம்புக்குளம் புனரமைப்பு திட்டத்தினை அமுல்படுத்த முன்னர் ஒரு சாத்தியவள அறிக்கையைப் பெற்று அதன் பிரகாரம் முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுடனும் பிரதேச சபை அதிகாரிகளுடனும் கலந்துரையாடி என்ன வகையான வழிவகைகள் மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கும்படி நீர்ப்பாசன பணிப்பாளரை கௌரவ முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

- சுற்றுலாத்துறை அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழ் நிர்மாணிக்கப்படும் கடற்கரையோர இருக்கைகள் பெரும்பாலானவை உடைந்துவிடுகின்றன என்றும் இவற்றின் பராமரிப்பு வேலைகளை பிரதேச சபைகளிடமே கையளிக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறப்பட்டது. அவ்வாறே மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சூரிய சக்தி விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பினையும் பிரதேச சபைகளே மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

- பொத்துவில் வைத்தியசாலையில் மருத்துவருக்கான வெற்றிடம் 4 வருடமாக நிரப்பப்படாமல் உள்ளது. நிந்தவூர் ஆயுர்வேத வைத்தியசாலையானது முக்கியமான மையப்பகுதியில் அமைந்து இருந்தாலும் அதற்கு ஒரு நிரந்தர கட்டடத்தினை அமைத்துக் கொடுக்காமல் வேறு ஒரு இடத்தில் புதிதாக ஒரு வைத்தியசாலையை நிர்மாணித்து வருவதையிட்டும் முறைப்பாடு செய்யப்பட்டது.

- அபிவிருத்தி தேவைகளுக்கான நிதி குறைந்த அளவிலேயே கிடைக்கப்பெறுவதனால் அபிவிருத்தி வேலைகள் கட்டம் கட்டமாகவே நடத்தப்பட்டு வருவதாகவும், நிந்தவூர் ஆயுர்வேத மத்திய மருந்தகத்தினை மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்த ஆயள்வேத ஆணையாளரின் அனுமதிக்காகவும் ஆளணி அனுமதிக்காகவும் அனுப்பப்பட்டுள்ளதாக கௌரவ சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

- வேண்டிய தகமைகள் இருந்தும் சேவையில் நிரந்தரமாக்கப்படாமல் உள்ள தன்னார்வ தொண்டு அடிப்படையில் வேலைசெய்த 15 சுகாதாரப் பணியாளர்களுக்கு தீர்வு வழங்கும்படியும் கோரிக்கை விடப்பட்டது. இதற்கு பதிலளித்த கௌரவ சுகாதார அமைச்சர் ஏறத்தாழ 500 பேர் இவ்வாறு வேலை இழக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தற்போது இவர்களுக்கு எதுவும் செய்ய முடியாது என்றும் எதிர்காலத்தில் உரிய இடங்களில் முயற்சித்து கணிசமான அளவு நியமனங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

- மாகாண அபிவிருத்தி அரங்கத்தின் மாவட்ட மட்டக் கூட்டத்தினை அதிகாரிகளுடன் கருத்துப்பரிமாற்றம் செய்வதற்கு பயன்படுத்தி தரமான திட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும் ஏற்படும் தடைகளை சவால்களாக ஏற்று அவற்றினைக் கடந்து செல்ல வேண்டும் என்றும் மக்களின் பங்குபற்றுதலினூடான கீழ்மட்ட திட்டமிடலும் முக்கியமானது என்றும் இதற்கு வசதி செய்யும் வகையில் அதிகாரிகள் கௌரவ மாகாணசபை உறுப்பினர்களுடன் மட்டுமன்றி பிரதேச சபை உறுப்பினர்களுடனும் ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

- அதிகாரிகள், கௌரவ மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் யாவரும் இன, மத, அரசியல் பேதமின்றி ஒன்றிணைந்து வேலை செய்வதன் மூலம் மக்களுக்குப் பயனுறுதியான சேவைகளை வழங்க முடியும் என்று கௌரவ முதலமைச்சர் கூட்டநிறைவின் போது தெரிவித்தார்.

மாகாண அபிவிருத்தி அரங்க அம்பாறை மாவட்டக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் பிரதம செயலாளர் நன்றி தெரிவித்து கூட்டத்தினை நிறைவு செய்தார்.

டி. எம். எஸ். அபயகுணவர்த்தன

பிரதம செயலாளர்

கிழக்கு மாகாண சபை